


திருப்பத்தூரில் தி.மு.க. மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி நிறைவு விழாவில் பங்கேற்ற மாநில தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., நீட் விலக்குக்கோரி கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட செயலாளர் தேவராஜி எம்.எல்.ஏ., சி.என். அண்ணாதுரை எம்பி, வில்வநாதன் எம்.எல்.ஏ. மற்றும் பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனிரவி – திருமதி ஆர்.ஜோதி போஸ் – தேன்மொழி மகள் பிரியதர்ஷிணி செல்லமுத்து – திருமதி ஜெயா மகன் கற்பூரசுந்தர பாண்டியன் திருமணத்தை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திருமதி பிரேமா பெரியகருப்பன் ஆகியோர் நடத்தி வைத்தார்கள். இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏ.கரி. ராமசாமி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

# ‘நீட்’ எதிர்ப்புக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்!

### திருவண்ணாமலையில் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலையில், அக்.29-

திருவண்ணாமலையில் தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் நீட் தேர்வு ரத்து செய்ய கோரி 10 லட்சம் மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

நீட் தேர்வை ரத்து செய்ய கோரி திமுக இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி மற்றும் பொறியாளர் அணி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது. அதனை தொடர்ந்து 27.10.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில், திமுக பொறியாளர் அணி சார்பில், திருவண்ணாமலை, அருணை பொறியியல் கல்லூரியில் நீட் தேர்வு ரத்து செய்ய கோரி 10 லட்சம் மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து பெறும் நிகழ்ச்சியின் தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாநில பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி தலைமை வகித்தார். மாவட்டப் பொறியாளர் அணி நிர்வாகிகள் அ.மோகன்ராஜ், ச.பிரகாஷ், டி.என்.பி.வினோத்குமார், த.ரகுபதி, தா.சண்முகம், து.மணிபரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் சி.ராம் காந்த் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முதல் டிஜிட்டல் கையெழுத்திட்டு, பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.



அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

சமூக நீதிக்கு எதிரான எந்த செயல்களையும் தி.மு.க. எப்போதும் எதிர்க்கும். நீதிக்கட்சி கால தொடங்கி இன்றைக்கு வரை தமிழ்நாடு சமூக நீதியை பாதுகாக்கும் மாநிலமாக இருக்கிறது. அதனால்தான், பிற மாநிலங்களைவிட தமிழ்நாடு வேறுபட்டு நிற்கிறது. உலகில் முதன்முதலாக நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் நீதிக்கட்சி ஆட்சியில்தான் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

அதேபோல், இடஒதுக்கீடு வழங்குவதிலும் தமிழ்நாடு தான் முன்னோடி. வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது, ஒன்றிய அரசு பணிகளில் 27 சதவீத இடஒதுக்கீட்டை கலைஞர் பெற்றுத்தந்தார். பிற மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது. மன்மோகன்சிங் பிரதமராக இருந்தபோது நீட் கொண்டுவரப்பட்டது. அப்போது, தமிழ்நாட்டுக்கு நீட் ஒத்துவராது என கலைஞர் எதிர்த்தார். அதனால், நீட் தேர்வை ஏற்காத மாநிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என சட்டம் இயற்றப்பட்டது.

**எடப்பாடி ஆட்சியில் தான் ‘நீட்’ நுழைந்தது!**

அதைத்தொடர்ந்து, பா.ஜ.க. அரசு வந்தபோதும் நீட் கொண்டுவரப்பட்டது. நீதிமன்றத்தின் மூலம் தமிழ்நாட்டுக்கு தடை ஆணை பெற்றார் கலைஞர் பின்னர், ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்திலும் கலைஞரை பின்பற்றி தமிழ்நாட்டில் நீட் வர அனுமதிக்கவில்லை. அவரது மறைவுக்கு பிறகு முதல்வரான எடப்பாடி பழனிசாமி ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் நீட் நுழைந்தது. அவர் தடுத்திருந்தால் வந்திருக்காது.

சமஸ்கிருதம் படித்திருந்தால் தான் மருத்துவம் சேர முடியும் என்ற நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றினோம். இப்போது, நம் உரிமையை பறிப்பதற்காக நீட் கொண்டுவந்துள்ளனர். பிளஸ்2 வரை படித்து பெறும் மதிப்பெண்களை விட 3 மாத தனியார் பயிற்சி மையங்களில் படித்து பெறுகிற நீட் மதிப்பெண்தான் தகுதியானது என்பதை எப்படி ஏற்க முடியும்?

பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் வந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் நீட் எதிர்ப்புக்காக எதையும் செய்ய தயாராக இருக்கிறார். சட்டமன்றத்தில் நீட்டுக்கு எதிராக ஏகமனதாக இயற்றிய தீர்மானத்தை கிடப்பில் போட்ட ஆளுநர், தனக்கு அதிகாரம் இருந்தால் அந்த தீர்மானத்தை ரத்து செய்துவிடுவேன் என பகிரங்கமாக பேசினார்.

**இன்னும் எத்தனை உயிர்களை இழப்பது?**

குஜராத் முதல்வராக இருந்தபோது, அந்த மாநிலத்துக்குள் நீட் நுழைய விடமாட்டேன் என பேசிய மோடி, பிரதமரான தும் எல்லா மாநிலமும் நீட் நடத்த வேண்டும் என வலியுறுத்துகிறார். நீட் தேர்வினால் சமூகம்பாழ்பட்டு கிடக்கிறது. மாவட்டத்தில் முதலிடம் பெற்ற அனிதாவால் கூட மருத்துவ படிப்பில் சேர முடியவில்லை. இன்னும் எத்தனை உயிர்களை இழப்பது.

நீட்டுக்கு எதிரான தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்கு உள்ளது. எனவே அந்த ஒப்புதலை பெறுவதற்கான அழுத்தத்தை கொடுப்பதற்காக, அமைச்சர் உதயநிதிஸ்டாலின் எடுத்த முயற்சியின் காரணமாக கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியாவிஜயரங்கன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பார்வதி சீனுவாசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, கு.கணேஷ், பச்சையம்மன் முத்து, பாலமுரளிகிருஷ்ணா, பிரவீன் ஸ்ரீதரன், துரைவெங்கட் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் மு.தினேஷ்பாபு நன்றியுரை கூறினார்.

## தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் மீது பழி போடும்

# ஆளுநர் நோக்கம் முறியடிக்கப்படும்!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!

சென்னை, அக். 29-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

சென்னை, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையான ராஜ்பவன் மீது, நேற்று முன்தினம் அக்டோபர் 25 ஆம் தேதி பிற்பகல் 2.45 மணியளவில், முதன்மை நுழைவாயிலில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது.

பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் துரிதமாகச் செயல்பட்டு, பெட்ரோல் குண்டு வீசிய நந்தனம் எஸ்.எம்., நகரைச் சேர்ந்த ரவுடி கருக்கா வினோத் என்பவரை உடனடியாக கைது செய்துள்ளனர்.

ஆளுநர் மாளிகையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் ஒரு நபர் பெட்ரோல் குண்டு வீச துணிந்தது கடும் கண்டனத்துக்குரியதாகும்.

இந்தச் சம்பவத்தை முழுமையாக விசாரித்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும். இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பதை தமிழ்நாடு அரசு



மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இதுகுறித்து, ஆளுநர் மாளிகை செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டு இருக்கிறது .

அதில், “பல மாதங்களாக, கவர்னரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றன.

இதில் பெரும்பாலும், தி.மு.க., தலைவர்கள் மற்றும் அதன் கூட்டணிக் கட்சியினர் வாய்மொழி வாயிலாக, பொதுக்கூட்டம் மற்றும் சமூக வலைதளம் வாயிலாக, கவர்னர் பற்றி அவதூறாக மிரட்டல் விடும் வகையில் பேசி வருகின்றனர்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, கவர்னரை பணி செய்ய விடாமல் தடுக்கும் வகையில் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றனர்” என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள இந்தச் செய்திக் குறிப்பு விஷமத்தனமான அரசியல் உள்நோக்கம் கொண்டது ஆகும்.

பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் போல ஆளுநர் ஆர். என். ரவி செயல்படுவதும், இந்துத்துவக் கோட்பாட்டை உயர்த்திப் பிடிப்பதும், ராஜ்பவனில் போட்டி அரசு நடத்துவதைப் போல இயங்குவதும் விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கிறது.

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டிய ஆளுநர், மரபுகளை மீறுவதால் அரசியல் கட்சிகள் கண்டனம் செய்கின்றன.

அரசியலமைப்புச் சட்டம் அளித்திருக்கிற வரம்புக்குள் நின்று ஆளுநர் செயல்பட்டால் விமர்சனங்கள் எழாது.

ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளுக்குக் கருத்துரிமை இருக்கிறது என்பதை ஆளுநர் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றம் இயற்றிய சட்ட முன் வரைவுகளுக்கு அனுமதி தராமல், தானடித்த மூப்பாக ஆளுநர் செயல்படுவது கண்டனத்துக்குரியது தான்.

ஆனால் இதையெல்லாம் திசை திருப்புகிற வகையில் திமுக உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் மீது ஆளுநர் பழி போட்டு இருப்பது, ஆளுநர் மாளிகை பாஜகவின் அரசியல் கூடாரமாக மாறி இருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

தமிழ்நாட்டில் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தி, அரசியல் ஆதாயம் தேட நினைக்கும் சக்திகள் சூத்திரதாரியாக இருந்து ஆளுநரைப் பயன்படுத்துகின்றனர் என்பதை தமிழக மக்கள் நன்றாகவே அறிவார்கள்.

இத்தகைய முயற்சிகள் முறியடிக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்.

## உண்மை நிலையை அறியாமல் பா.ஜ.க. தலைவர் பேசி வருகிறார்!

# நாமக்கல் கவிஞருக்கு உரிய மரியாதையை தி.மு.க. அரசு எப்போதும் வழங்கி வருகிறது!

### கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. பேட்டி!

நாமக்கல் அக். 29 -

நாமக்கல் புதிய பேருந்து நிலையத்திற்கு கலைஞர் பெயரை வைக்கும் விவகாரத்தில், உண்மை நிலையை அறியாமல் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை பேசி வருகிறார் . நா.மக்கல் கவிஞருக்கு உரிய மரியாதையை திமுக அரசு எப்போதும் வழங்கி வருகிறது கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி பேட்டியில் கூறியுள்ளார்.

நாமக்கல கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஷ்குமார் நாமக்கல்லில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

நாமக்கல்லில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு முன்னாள் முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றாண்டை முன்னிட்டு அவரது பெயரை வைக்க வேண்டுமென நாமக்கல் நகர் மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார். பாஜக மாநில தலைவர் அண்ணாமலை அண்மையில், கோவையில் அளித்த பேட்டி ஒன்றில் நாமக்கல்லில் உள்ள பேருந்து நிலையத்திற்கு நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை பெயரை சூட்டலாமே என தெரிவித்திருந்தார்.

நாமக்கல் மக்களுக்கு பெருமை சேர்த்த கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, அவரது புகழை உலகம் முழுக்க பரப்பியதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகப் பெரிய பங்கு இருக்கிறது. நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்களது பெயரில் கடந்த 1969 ஆம் ஆண்டு நாமக்கலில் அரசு கல்லூரிக்கு நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை என பெயர் சூட்டியதும், தமிழ்நாடு சட்டசபையில் நாமக்கல் கவிஞர் மாளிகை என பெயர் வைக்கப்பட்டதும் திமுக ஆட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.



ஏனென்றால் நாமக்கல் மக்களுக்கு புகழ் சேர்க்கின்ற வகையில் அவரது பெயரை வைத்து இருந்தார். நாமக்கல் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கவிஞருக்கு மார்பளவு சிலை வைக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தனர். அதனை ஏற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல்லில் உள்ள நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் கவிஞருக்கு மார்பளவு சிலை திறந்து வைத்தார்.

இந்த சிலை திறப்பு விழாவின் போது கவிஞரது குடும்பத்தினர் அமைச்சரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அம்மனுவில் நாமக்கல் கவிஞர் அரசு நினைவு இல்லத்தில் மார்பளவு சிலை வைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இதை அடுத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சென்று அரசாணை பெறுவதற்கான முயற்சி எடுத்தார் அதன் பயனாக தமிழ்நாடு அரசு நாமக்கல்லில் உள்ள கவிஞரது பூர்வீக இல்லத்தில் நினைவு இல்லத்தில் ரூ. 20 லட்சம் மதிப்பில் மார்பளவு சிலை நிறுவுவதற்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் ஆட்சி செய்து வரும் திராவிட மாடல் அரசு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மண்ணுக்கு பெயர் சேர்த்த நாமக்கல் கவிஞரின் பெயரையும், புகழையும் நிலைநாட்டும் விதமாக கவிஞரது பூர்வீக இல்லத்தில் மார்பளவு சிலை அமைக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் நாமக்கலில் புதிதாக அமைய உள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு நாமக்கல் கவிஞர் பெயரை வைக்க வேண்டும் என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கோரிக்கை வைத்துள்ளார். திராவிட முன்னேற்ற கழக அரசு எப்போதெல்லாம் ஆட்சியில் இருந்தாலும் நாட்டுக்காக விடுதலைக்காக பாடுபட்டவர்கள், இனத்திற்காகவும், மொழிக்காகவும், பாடுபட்டவர்களுக்கு பெருமை சேர்ப்பதற்கு நினைவு இல்லங்கள், சிலைகள் அமைப்பதற்கு என்றைக்கும் தவறியதில்லை. கவிஞரது குடும்பத்தினர் மட்டுமல்லாது நாமக்கல் மக்கள் மட்டும் இல்லாது இந்த தமிழ் சமுதாயமே பாராட்டக் கூடிய வகையில் அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு அரசு சார்பில் எடுக்கப்பட்டு வருகிறது.

ஒரு தலைவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற நேரத்தில் அந்தத் தலைவனுடைய பணிகளை போற்றும் விதத்தில் அவரது பெயரில் நிகழ்ச்சிகள் நடத்துவதும், சிலைகள் அமைப்பதும் வழக்கம். அந்த வகையில் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடி வருகிறோம். அந்த வகையில் நாமக்கல் நகர் மன்றம் முத்தமிழறிஞர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் வகையில் புதிய பேருந்து நிலையத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது அரசாணைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடந்த 1996 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்டு தனியாக நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அடிப்படை பணிகளை செய்து உள்ளார். நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல்லுக்கு உயிரோட்டமாக உள்ள முட்டை தொழில் ஊக்குவிக்கும் வகையில் சத்துணவிலே முட்டை சேர்த்து கோழிப்பண்ணை தொழிலை உயர்த்தி விட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த அளவுக்கு சிறப்பு பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் விதமாக புதிய பேருந்து நிலையத்திற்கு பெயர் வைப்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது எல்லாம் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை அவர்களுக்கு தெரியவில்லை. வரலாற்றை திரும்பி பார்க்க வேண்டும். அவர் உண்மைத் தன்மையை அறிய வேண்டும். கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்களது பெயரையும், புகழையும் சேர்க்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவரது வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் செயலாற்றி வருகின்றனர் என்பதை அறிய வேண்டும் உண்மையை அறிந்து பேச வேண்டும் ஒரு இயக்கத்திலே மாநிலத் தலைவராக இருப்பவர் உண்மை நிலையை தெரியாமல் பேசுவது சரியானதல்ல. குஜராத்தில் உள்விளையாட்ட அரங்கத்திற்கு பிரதமர் மோடியின் பெயரை வைத்துள்ளனர். வாஜ்பாய் பெயரை ஏன் வைக்கவில்லை ? என ராஜேஸ்குமார் எம்.பி கேள்வி எழுப்பினார்.

பாஜக மூத்த தலைவர்கள் இருப்பவர்களை பற்றி அறிந்து கொள்வதில்லை. பிரதமர் மோடியின் ஆட்சியில் கணக்கு தணிக்கை அறிக்கை ரூ. 7.5 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளது. அதை மறைக்க இது போன்ற உண்மையை உணராமல் அண்ணாமலை பேசி வருவது மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையை ஏற்படுத்தாது. ரூ. . 7.5 லட்சம் கோடி இழப்பு மோசடி நடந்துள்ளதை இந்திய அரசே நாடே அறிந்திருக்கிறது. அதை மறைப்பதற்கு என்ன பேச வேண்டும் எதை பேச வேண்டும்? எதைக் குறித்து பேச வேண்டும்? அறியாமல் பேசி வருவது பேசிவருவது அவரது பேச்சின் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. பாஜக மாநில தலைவர் அண்ணாமலை உண்மையை அறிந்து பேச வேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த பேட்டியின் போது நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நகராட்சி தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயற்குழு கூட்டம்!

### பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் அறிவிப்பு!

சென்னை, அக். 29 -

வேளச்சேரி மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயற்குழு கூட்டம் இன்று (29.10.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு எண். 61F, வேளச்சேரி மெயின் ரோடு, வேளச்சேரியில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகமான பொ.தனசேகரன் மாளிகையில் பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிக்கு உட்பட்ட மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. 5.11.2023 அன்று நடைபெறவுள்ள BLA2 கூட்டம்

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# 106 ‘அ’ வட்ட கழக (BLA2) பாக முகவர்கள் கூட்டம்!

### இரா.நவீந்திரகுமார் வேண்டுகோள்

சென்னை, அக். 29 -

106 அ வட்டக் கழக பாக முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம் இன்று (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி அளவில் சென்னை106 அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ காலனி பஸ் டிப்போ பின்புறம் அமைந்துள்ள G.G.மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே. சிற்றரசு எம்.சி.,

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., அண்ணாநகர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி. அண்ணாநகர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் காசி முத்துமாணிக்கம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி, துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட கழக செயலாளர் இரா.நவீந்திரகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.